மலரும் புத்தாண்டை
மங்களமாய் கொண்டாட
மங்கையரே நாடுங்கள்!

**S. லிங்கநாதன்**
**வண்ணச்சோலை**
13-14,
மேஜர் சோதியா தெரு,
(பெரிய கடை)
யாழ்ப்பாணம்.

[34119]



பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00



நம்பிக்கையூட்டும் நத்தார்
பெருநாளை
நன்றே கொண்டாட
நல்ல புடைவை தினிசுகளுக்கு
நம்பிக்கையோடு
நாடுங்கள்:

**S. லிங்கநாதன்**
**வண்ணச் சோலை**
13-14,
மேஜர் சோதியா தெரு,
(பெரியகடை)
யாழ்ப்பாணம்.



சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 27 செவ்வாய்க்கிழமை (13 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 17


## சந்திரிகா அறிவிப்பு

# அரசின் யுத்த நிறுத்த யோசனைக்கு விடுதலைப்புலிகள் தரப்பில் இணக்கம்!

# மோதல் தவிர்ப்பு உடன்பாடு இரு வாரங்களில் அமுலுக்கு

கொழும்பு, டிசம்பர் 13

★ யுத்த நிறுத்தம் தொடர்பாக அரசு தெரிவித்த யோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் கொள்கையளவில் இணங்கியுள்ளனர்.

★ இரு தரப்பினரிடையேயும் மோதல் தவிர்ப்பு நிலை (Cessation Of Hostilities) இரு வாரகாலத்துக்குள் நடைமுறைக்கு வரும் என நம்புகிறேன்.

— இவ்வாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா நேற்று அறிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

மூன்று வாரங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளுடன் அரசு மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் அடிப்படைகள் கடிதங்கள் மூலமாகப் பரிமாறப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைகளையும், அடிப்படைகளையும் தற்போது தெரிவிக்க முடியாதுள்ளது,

உரிய காலத்தில் அவை பொதுமக்களுக்கு வெளியிடப்படும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

**"முச்சந்தி முரளி"**



ஏதோ தாங்கதான் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தின மாதிரி எல்லோ அம்மாவின்ர கதை கிடக்குது .... !

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 13

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ-3)

## சமாதான முயற்சிகளில் சந்திரிகா தாமே நேரடியாக ஈடுபடுகிறார்

### அரச சார்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, டிச. 13

விடுதலைப் புலிகளுடனான தற்போதைய சமாதான முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தானே நேரடியாக சுறுசுறுப்புடன் மேற்கொண்டு வருவதாக தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''டெய்லி நியூஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சமாதான முயற்சியில் விரைவில் ஏதாவது நல்லது நடக்கலாம் என்று ஜனாதிபதி நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்தே ஆனையிறவு பாதையைத் திறக்கும் கோரிக்கையை அரசு முன்வைத்தது என அதே வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் டெய்லி நியூஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## தமிழ் வியாபாரி வவுனியாவில் கொலை

### ஆயுதக் குழுவால் சுடப்பட்டார்

கொழும்பு, டிச. 13

வவுனியாவில் மர வியாபாரி ஒருவர் கடந்த புதனன்று அடையாளம் தெரியாத துப்பாக்கி குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

செவலகியூ என்றழைக்கப்படும் சரவணமுத்து குலேந்திரனே கொல்லப்பட்டவராவார்.

செட்டிகுளம் பகுதியில் உள்ள பாரதபுரத்தில் ஞானதேவி கோயில் அருகில் வைத்து அவர் சுடப்பட்டார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடந்த பின்னர் வவுனியாவில் இவரையும் சேர்த்து இதுவரை 10 பேர் துப்பாக்கி மனிதர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

## ஆனையிறவு பாதையை நிரந்தரமாக திறக்கவே அரசு விரும்புகின்றது

### அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, டிச. 13

ஆனையிறவுப் பாதையை நிரந்தரமாகவே அரசு திறக்க விரும்புவதாகவும் —

பாப்பரசரின் விஜயத்துக்கு மட்டும் அப்பாதையைத் திறக்க அரசு விரும்பவில்லை என்றும் — அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பாப்பரசரின் வருகை தினமான ஜனவரி 20 க்கு முன்னர் ஆனையிறவுப் பாதையில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுவது பிரச்சினையாக இருக்க முடியும் என்றும் எனினும் இவ்விஷயத்தை சமாளித்து விடலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார் [இ-ஒ]

## உயர்தர பரீட்சை முடிவுகள் நேற்று வந்து சேரவில்லை

### விமானத் தாமதம் காரணம்

யாழ்ப்பாணம், டிச. 13

எதிர்பார்க்கப்பட்டது போல ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வந்து சேரவில்லை.

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை பலாலி வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்பட்ட விமானம் பிற்பகல் 4-30 மணிக்கு வந்ததாலேயே தாமதம் ஏற்பட்டது.

உயர்தர பரீட்சை முடிவுகளும், கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சை வினாப் பத்திரங்களும் நேற்றுக் காலை விமான மூலம் பலாலி வந்து சேரும் என்ற தகவலைத் தொடர்ந்து —

''கோமாரி'' கப்பல் காங்கேசன்துறையிலேயே காத்து நின்றது.

விமானம் தமாதமாகி வந்ததாலும் —

அதன் பின்னர் புறப்பட்டு மாலை ஆறு மணிக்கு முன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முள்ளிக்குளம் பகுதியில் படையினர் கூட்டாக நடத்திய பாரிய தாக்குதல்

### புலிகள் முறியடித்தனர்

யாழ்ப்பாணம், டிச. 13

மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் விமானப்படை பொம்பர்களும், ஹெலிகளும், மற்றும் கடற்படைப் படகுகளும் கூட்டாக இணைந்து பலத்த தாக்குதல்களை நடத்தியுள்ளன

காலை 9 மணியளவில் கூக்குளம் கடற்பகுதிக்குள் பிரவேசித்த கடற்படைப் படகுகளில் இருந்து கரையோரப் பகுதிகளை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதனையடுத்து விடுதலைப் புலிகளின் அணி ஒன்று கடற்படைப் படகுகளை நோக்கி பதில் தாக்குதல் நடத்தியது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவுடன் 'ஹபரண' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு!

யாழ்ப்பாணம், டிச. 13

திருகோணமலையில் மா ஏற்றிக் கொண்டிருக்கும் ஹபரண கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி நேற்று மாலை தெரிவித்தார்.

2 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு இக் கப்பல் அங்கிருந்து இன்று மாலை புறப்பட்டு நாளை காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும்.

யாழ். மாவட்டத்துக்காக திருமலையில் இருந்து மா ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டு வந்த இந்தக் கப்பல் கடந்த மாதம் தெற்கில் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து திருமலையில் இருந்து கொழும்புக்கான சேவையில் ஈடுபட்டுவந்தது. (ஐ-3)

## வருடாந்த மாநாட்டுக்கு வருமாறு தமிழ் கட்சிகளுக்கு ஐ.தே.க. அழைப்பு!

கொழும்பு, டிச. 13

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளும்படி தமிழ் அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் சனியன்று கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

கடந்த ஓகஸ்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல், நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றில் ஐ. தே. கட்சி தோல்வியடைந்த பின்னர் இந்த வருடாந்த மாநாடு நடைபெறவிருக்கின்றது

இவ்விரு தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி [illegible] பிரசாரத்தை மேற்கொண்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கல்லடியில் பொலீஸார் மீது கிரனேட் வீச்சு!

கொழும்பு, டிச. 13

மட்டக்களப்பு மாவட்டம் கல்லடியில் டச்பார் என்னும் இடத்தில் கடந்த புதனன்று பொலீஸார் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டரும், பெண் ஒருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து—

மட்டக்களப்பு நகரப்பகுதி மற்றும் கல்லடி ஆகிய இடங்கள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. (ஐ-3)

## வங்காலையில் தாக்குதல்; படையினர் மூவர் மரணம்;

கொழும்பு, டிச. 13

மன்னார் மாவட்டம் வங்காலை இராணுவ முகாம் மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் —

தாக்குதலைத் தொடர்ந்து புலிகளுக்கும் படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் படையினர் தரப்பில் மூவர் கொல்லப்பட்டனர் என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (ஐ)

## பொலீஸாரால் தேடப்பட்டு வந்த பாதாள உலகத் தலைவர் கொழும்பில் கைதானார்!

கொழும்பு, டிச. 13

லலித் அத்துலத்முதலி மற்றும் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் சி.வி. குணரத்தின ஆகியோரை கொலை செய்ய முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாதாள உலகத் தலைவர் ஒருவரையும் அவரது இரு சகோதரர்களையும் தெஹிவளைப் பொலிஸார் கடந்த சனியன்று கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து எறிகுண்டுகள், கிரனேட்டுக்கள் துப்பாக்கி, மற்றும் சிவப்பு நிற லான்ஸர் கார், மோட்டார் சைக்கிள் என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ள பாதாள உலகத் தலைவர் தெஹிவளையில் வைத்து லலித் அத்துலத் முதலியை தாக்கியது, அங்கு வைத்து அவரை சுட்டுக்கொல்ல முயற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாணய நிதியக் குழு கொழும்பு வந்தது!

### புதிய அரசுடன் பேச்சு நடத்தும்

கொழும்பு, டிச. 13

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

நன்கொடை நாடுகள் குழுவின் முக்கிய கூட்டத்துக்கும், 1995ஆம் ஆண்டு துவக்கத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரதான வரவு-செலவுத் திட்டத்துக்கும் முன்னர்—

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் தூதுக்குழுவினர் பேச்சுகள் நடத்தவிருக்கின்றனர்.

புதிய அரசுடன் புரிந்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காமினி கொலை:

## புலனாய்வுக்குழு இவ்வாரம் இந்தியா செல்லும்

கொழும்பு, டிச 13

காமினி திஸாநாயக்காவின் கொலை தொடர்பான விசாரணைகளுக்கு இந்திய விசேட புலனாயவுப் பிரிவினரின் உதவியைப் பெறுவது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த குழு ஒன்று இவ்வாரம் இந்தியா செல்ல உள்ளது.

கொழும்பு, கிராண்ட்பாஸில் நடத்தப்பட்ட இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் காமினி திஸாநாயக்கா உட்பட 57 பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இது தொடர்பாக இதுவரை நடைபெற்ற விசாரணைகளில் எந்தவித திருப்பமும் ஏற்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## உடல் உறுப்புகளுக்காக குழந்தைகள் விற்பனை!

### கொழும்பில் மோசடி கண்டுபிடிப்பு!

கொழும்பு, டிச. 13

மாற்று உறுப்புகளுக்காக குழந்தைகளை விற்பனை செய்யும் குழு ஒன்றை கொழும்பில் பொலீஸ் அதிகாரிகள் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வீடு ஒன்றில் இருந்து 2 குழந்தைகளுடன் இரண்டு பெண்களை பொலீஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இக்குழுவின் பின்னணியில் டாக்டர் ஒருவரும், வர்த்தகர் ஒருவரும் செயல்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை கொழும்புச் சிங்கள தினசரி ஒன்று நேற்று வெளியிட்டது. (ஐ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இவ்வாரம் தருவிக்கப்பட்ட புதிய 1995 மாதக்கலண்டர்கள் விற்பனைக்குண்டு. உங்கள் விலாசமிட்டு எம்மிடம் அழகாக மலிவாக பதிப்பித்தும் கொள்ளலாம். மகாலக்சுமி அச்சகம், 127, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (8066)

சகல விடுமுறை நாட்களும் (தமிழீழம் உட்பட) அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் ரூபா 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம் பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். [33928]

## அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்கள் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936

## விடு வளவு விற்பனைக்கு

நன்னீர், சுற்றுமதிலுடன் 5¼ பரப்பு காணியும், பழைய வீடும் தலையாளி கொக்குவிலில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: டாக்டர் அ. பாண்டுரங்கன், தலையாளி, கொக்குவில். (8076)

## மணமகள் தேவை

யாழ். இந்து, 28 வயது, சித்திரை நட்சத்திரம், 10இல் செவ்வாய், லண்டனில் நான்கு வருடங்களாக Accountancy படித்துக்கொண்டு வேலையும் செய்யும் மணமகனுக்கு லண்டனில் வதியும் மணமகள் தேவை. தொடர்பு: இல. 957, மே/பா உதயன். (8077)

## சேவை

குறைந்தசெலவில் நிறைந்த சேவை. தமிழ், ஆங்கில தட்டச்சும் மற்றும் றோணியோ பிரதிகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: திருமால் அச்சகம், 393, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (34130)

## பெண் கட்டர் தேவை

ஆடை தயாரிப்பு நிலையம் ஒன்றுக்கு விதம் விதமாக மாதிரி உடைகள் வெட்டிக் கொடுப்பதிலும், மற்றும் உள்ளங்கி (பிறா) வெட்டித் தைப்பதிலும் பயிற்சி உள்ள பெண்கள் தேவை. 31-12-94 முன்பாக விண்ணப்பிக்கவும். இல. 728, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (சி-9883)

## மணிக்கூடு திருத்தல்

சகலவித மணிக்கூடுகளையும் மற்றும் றேடியோக்கள், ரி. வி. டெக்குகளை பழுது பார்த்துக் கொள்ள ல்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி-9912)

## சுருக்கெழுத்தாளர் பயிற்சி

தமிழ், ஆங்கில மொழிகளில் சுருக்கெழுத்தாளர் பயிற்சி ஆரம்பம்: 25-12-94 பொது அலுவலக செயல்முறைப் பயிற்சியுடன் கூடியது. விண்ணப்பப் படிவங்களை நேரில் பெறலாம். செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி, கரவெட்டி. (8074)

## வீதியின் நிலை மிக மோசம்

தென்மராட்சி, டிச. 1

அண்மைய மழையை அடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து பளை வரையிலான பிரதான வீதி மிக மோசமாக சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கிறது.

இவ் வீதியில் சைக்கிளில் செல்வோர் கூட பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

இப்பிரதான வீதி இவ்வாண்டு திருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-11)


**COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE FOR STUDENTS**

G. C. E. (O/L) பெறுபேறுகளை எதிர்நோக்கியுள்ள மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள்.

காலம்: — 3 மாதம்
கட்டணம்: — மாதம் 450/-

★ இலகு விரிவுரைகள்
★ செய்முறைப் பயற்சிகள்

ஆரம்பம்: 16 - 12 - 1994

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 St. PETER'S LANE,
JAFFNA.

[சி-9944]


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## வரவு-செலவுத்திட்டம்-1995

1995ஆம் ஆண்டிற்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விவரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு-செலவுத் திட்டம் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம்) (252) (212) (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
12-12-1994

[சி/9813]


**நிரு ரியூசன் சென்ரர்**
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

பட்டப்படிப்புகளுக்கான விரிவுரைகள்

**G.A.Q.**

பேராதனை, யாழ்ப்பாணம்.

மேற்படி கற்கை நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளது.

மாணவர்கள் உடன் அனுமதிகளைப் பெறவும்.

யாழ். முன்னணி விரிவுரையாளர்களின் ஒன்றிணைந்த சேவை

B. A. பகுதி - I
B. A. பகுதி - II
யாழ்ப்பாணம்

[சி-9941]


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**இருஷ்ணபிள்ளை ஸ்ரீதரன் (ஆமிஸ்ரீ)**
(லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

தோற்றம்: 1961 — 10 — 09
மறைவு: 1990 — 11 — 28

திதி: 13 — 12 — 1994

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு ஆண்டு நான்கானதடா! - உன் அழகுமுகம் மறையவில்லை. ஆண்டவனை வேண்டுகிறோம் - நீ மீண்டும் பிறந்து வர.

நித்தமும் உங்கள் நினைவால் துயருறும்;
தாய், சகோதரர்கள், மனைவி,
மகன், உறவினர், நண்பர்கள்.

''லங்காதேவி இல்லம்'',
உடுவில், சுன்னாகம்.


**I. A. B. (LONDON)**
(Accountancy பரீட்சை)
**JUNE - 1995**
FOUNDATION INTER & FINALS

ஆரம்பம்: 19 - 12 - 1994

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 St. PETER'S LANE,
JAFFNA.

[சி-9943]


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

## பொது நிர்வாகசபை கூட்டம்

காலம்: **14-12-1994**
புதன்கிழமை 3-00 பிற்பகல்

இடம்: புதிய விஞ்ஞானக் கழகம்
(எழிலகம் முன்பாக) யாழ்ப்பாணம்.

விடயம்:

1. மாவட்ட நிர்வாக சபை தெரிவு
2. 1995ஆம் ஆண்டிற்கான தனியார் கல்வி நிறுவனங்களின் நடைமுறைகள் பற்றிய பரிசீலனைகள்

சகல கோட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் (7 பேரும்) சமுகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

[சி-9945]

அமரர்

## துரையப்பா செட்டியார் சீனிவாசகம்

(BA, J.P)
(பெருமாள் கோயில் தலைவர், வைத்தீஸ்வரா ஆசிரியர்)

தோற்றம்: 21 — 05 — 1907
மறைவு: 05 — 12 — 1992

திதி: கார்த்திகை வளர்பிறை ஏகாதசி

பெரும்தகையாக புகழுடன் வாழ்ந்த அமரர் பெரியார் துரையப்பா செட்டி சீனிவாசகம் அவர்களை பெருமையுடன் நினைவு கூருகிறோம்.

மனைவியும்,
சகோதரர்கள் குடும்பங்களும்.

பெருமாள் கோயிலடி. (34164)


**எடிசன் அக்கடமி**

(யாழ். இந்து அருகில்)
411/1, K.K.S. Road,
யாழ்ப்பாணம்,

(கொக்குவில் இந்து அருகில்)
27, K.K.S. Road,
கொக்குவில்.

ஆண்டு 4 முதல் O/L வரை
2 ஆவது புதிய பிரிவு

ஆரம்பம்: 12·12·1994

(சி-9814)


## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் கருவில்: 18-10-1966

தந்தையுடன் காற்றினில்: 13-12-1992

**செல்வி வாசுகி மனோகரா**

காத்திருந்தோம் நீ வருவதற்காய் — உன்
பூத்த முகம் பார்த்திருந்தோம் மகிழ்வதற்காய்
பூத்த மலர் வாடியதேன் — எம்
பார்த்திருந்த பூவிழியில் நீர் ஓடியதேன்.

நண்பர்கள்
பல்வைத்தியப் பயிற்சிநெறி D/A 1991
யாழ். தொழில்நுட்பக் கல்லூரி

(34168)

## குறைந்த வாடகை வீடுகளை கொள்வனவு செய்ய கடன்

கொழும்பு, டிச. 13

குறைந்தவாடகை கொண்ட அரச வீடுகளில் குடியிருப்போர் அவற்றைக் கொள்வனவு செய்ய வங்கிக் கடன் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு திணைக்களம் ஆகியவற்றால் வாடகைக்குக் கொடுக்கப்பட்ட சுமார் ஒரு லட்சம் வீடுகளை தற்போதைய குடியிருப்பாளர்களுக்கு விற்றுவிட வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது தெரிந்ததே.

எனினும் அநேகமானோர் இவ் வீடுகளை வாங்குவதற்கு நிதி வசதியில்லாது இருக்கிறார்கள் என்று அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இவர்களுக்குக் கடன் வசதி வழங்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் முன் வந்துள்ளது.

குறிப்பிட்ட வீடுகளில் 15 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியாக வாடகைக் குடியிருப்பாளர்களாக இருப்பவர்கள் இந்தக் கடனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-ா)

## விசர் நாய்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம், டிச. 13

வடமராட்சி பொலிகண்டி, சமரபாகு பகுதியில் விசர்நாய்களின் அட்டகாசத்தினால் மக்கள் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமையும் விசர்நாய்கள் இரண்டின் அட்டகாசத்தினால், மக்கள் பலர் வீதிகளில் சிதறி ஓடி அல்லோலகல்லோல நிலை ஏற்பட்டது. பின்னர் அந்த நாய்களில் ஒன்று அடித்துக் கொல்லப்பட்டது. மற்றைய நாய் ஓடி மறைந்து விட்டது.

அதேதினம் மற்றொரு விசர்நாயும் ஆடு, மாடுகளை கலைத்து கலைத்து, கடித்து விட்டு ஓடி மறைந்துள்ளது.

கடந்த வாரமும் அந்தக் கிராமத்தில் விசர் நாயின் அட்டகாசத்தினால், சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றிருந்தன என்பது தெரிந்ததே. (ஒ-15)


**I. A. S.**
ஆவரங்கால்
**SPOKEN ENGLISH BY BRITTO**
ஆரம்பம்: 15—12—94
வியாழன் பி. ப. 5 மணி
(34169)


## 31ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 13 — 07 — 1932
கண்ணன் பாதம்: 13 — 11 — 1994

அமரர்

**அன்னலட்சுமி தம்பித்துரை**

பத்துமாதம் சுமந்து பெற்று, எம்மை எல்லாம் வளர்த்த அன்பு தெய்வமே, அம்மா, நீங்கள் மறைந்த முப்பத்தொன்று ஆன இந் நாளில் தங்கள் ஆத்மா சாந்தியடைய நாராயணமூர்த்தியை நாங்கள் பிரார்த்திக்கிறோம்.

த. சிவம் [மகன்]
மகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்

புதுறோட்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

[34172]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 24 — 07 — 1929
ஆண்டவன் அடியில்: 25 — 11 — 1993

**அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்**
(ஓய்வுபெற்ற P.W.D. ஓவசியர் R.M.C.R.D.A.)

திதி வெண்பா

ஆண்டு ஸ்ரீமுக ஆர் கார்த்திகைத் திங்கள்
காண்பூர்வ பட்சத் தேகாதசியில் - ஈண்டுபுகழ்
சந்திர சேகரச் சான்றோன் இணுவையமு
ஐந்து கரன் தாள்களடைந்தான்.

ஊரவர் தம் நெஞ்சுகளில்
உள்வீட்டோரார் நெஞ்சுகளில்
பேரருளோர் நெஞ்சுகளில்
பெருமையுடன் வாழும் ஐயா,
நீருமிழும் கண்களுடன்
நித்தம் உம்மை நினைந்தேத்தி
ஓரழுகை ஆண்டுறினும்
உம் நினைவின் மயமே நாம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரமக்கள்.

''அன்பகம்'',
இணுவில் மேற்கு,
இணுவில்.

(7829)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## முயற்சியை முடுக்குக

உள்நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் பயன் அளிக்காத பட்சத்தில், சர்வ தேச உதவியுடனாவது நாம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வோம்.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

அவரது இந்தக் கூற்றை மேலோட்டமாகப் படிக்கும் எவருக்கும், உள்நாட்டு சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி நம்பிக்கை இழந்து விட்டாரோ என்ற ஐயப்பாடு இயல்பாகவே எழும்.

ஆனால் அவர் கூறியவற்றை கூர்ந்து நோக்கினால் சமாதானத்தை அடைய வேண்டும்; இனப்பிரச்சினைக்கு எப்படியாவது தீர்வுகாண வேண்டும்; என்ற நோக்கத்தில் தாம் தளர்ந்துவிடவில்லை என்பதனை வெளிக்காட்டுவதாகவே அவரது கூற்று அமைந்திருப்பதனை அவதானிக்கலாம்.

தற்போதைய சமாதான முயற்சிகள் வெற்றி அளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இம்முயற்சியில் நாம் தோல்வியை எதிர்பார்க்கவில்லை —

எத்தகைய இடையூறுகள் வந்தாலும் தற்போதைய சமாதான முயற்சிகளை நிறுத்த மாட்டோம். எமது சமாதான முயற்சிகள் நல்ல பயன் அளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. —

வடக்கு — கிழக்கு மக்கள் ஓர் உறுதியான சமாதானத்தை எதிர்பார்க்கின்றனர். இந்த நிலையில் சமாதானத்தை ஏற்படுத்துவது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது — என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இப்போதைய சமாதான முயற்சிகளில் நம்பிக்கையும், அதே வேளை சமாதானத்தை உண்டாக்குவதில் உறுதியாகவும் இருக்கும் ஜனாதிபதி, சர்வதேச உதவி குறித்துப் பிரஸ்தாபிக்க வேண்டியது அவசியமற்றது.

எந்த ஏற்பாட்டுக்கும் ஒரு மாற்று வழி வைத்திருக்க வேண்டும் என்பதற்கு இணங்க, இது விடயத்திலும் அவர் மாற்று நடவடிக்கையை மனதில் வைத்திருக்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

எதற்கும், சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், சமாதான முயற்சிகள் தாமதமாவதை, ஆமை வேகத்தில் நகர்வதை இலகுவில் அவதானிக்க முடிகிறது. தமிழர்கள் மட்டுமன்றி சிங்கள மக்களின் பெரும்பாலானோரும் இந்தத் தாமதம் கண்டு நம்பிக்கை இழந்து வருகிறார்கள்.

கொழும்பில் நடைபெற்ற சமாதானப் பேரணி, பி.பி.ஸியின் சிங்களச் சேவைக்கு அதன் நேயர்கள் எழுதிய கடிதங்கள் ஆகியன, சமாதான முயற்சிகளில் சிங்கள மக்களுக்குச் சந்தேகம் எழுந்துள்ளது; அது குறித்துக் கவலையுற்றிருக்கிறார்கள் என்பதற்குப் போதிய சான்றுகள் ஆகும்.

ஆகையால், சந்திரிகா மாற்றுவழி குறித்து இப்போதைக்குச் சிந்திக்கக் கூடாது. இப்போதைய சமாதான முயற்சியில் வெற்றி அடையவேண்டும் என்ற முழு நோக்குடன் செயற்படவேண்டும். தமது முயற்சிகளுக்கு உண்டாகும் இடையூறுகளைக் களைந்து முன்னேறிச் செல்லக்கூடிய செயற்திறனும் துணிவும் அவருக்குத் தேவை. குறிப்பாகஇராணுவத் தீர்வை விரும்புவோரின், போரை நீடித்து ஆதாயம் பெற விரும்புவோரின் செல்வாக்குக்கு உட்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

''இது இல்லாவிட்டால் அது'' (இன்னொன்று) என்ற மனப்பாங்குடன் செயற்பட்டால் இப்போதைய முயற்சியில் வெற்றி கிடைப்பது சந்தேகத்துக்கு இடமாகிவிடும்.

எனவே, ஜனாதிபதி சந்திரிகா, இப்போதைய சமாதான முயற்சியை முடுக்கிவிடும் வகையில் மனத்தளம்பலோ, சோர்வோ இன்றிச் செயற்படவேண்டும். வெறும் வாய் வேதாந்தம் பயன் தராது. நேர்மை செறிந்த செயல் ஒன்றே உரிய விளைவைத் தரும் என்பதை அவர் உணரவேண்டும்.

---

### யுனிசெவ் போன்ற தொண்டு நிறுவனங்கள்
# வடக்கு - கிழக்குக்கு வழங்கிய நிதி உதவி
# முன்னைய அரசால் செலவிடப்படவில்லை
## தாதியர், குடும்பநல சேவையாளர் பற்றாக்குறைக்கு இதுவே காரணம்

யாழ்ப்பாணம், டிச. 13

யுனிசெவ் போன்ற சுகாதார தொண்டர் ஸ்தாபனங்களால் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட நிதிகளுக்கு இப் பகுதிகளுக்கு முன்னைய அரசாங்கத்தினால் செலவிடப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

1991ஆம் ஆண்டுக்குப் பின் வடபகுதியில் தாதியர்கள் மற்றும் குடும்பநல சேவையாளர்களுக்கு புதிதாக ஆட்களைச் சேர்த்து பயிற்சி வழங்கப்படாமைக்கும், வடக்கு - கிழக்கில் தாதியர், குடும்பநல சேவையாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதற்கும் இதுவே காரணம் என்று கூறப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டளவில் அனைவருக்கும் சுகாதாரம் என்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் குறிக்கோளை எட்டுவதற்கு யாழ். மாவட்ட தாதியர் பயிற்சிக் கல்லூரியிலும் புதிதாக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு பயிற்சிகள் வழங்க வேண்டியிருந்தது.

இதற்கான நிதி உதவியை உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கியுள்ள போதிலும் இந் நிதி ஐ. தே. க. அரசாங்கத்தினால் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு வழங்காமல் தென் பகுதிக்குச் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

1991ஆம் ஆண்டில் யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவான 8 பயிலுநர் தாதியர்களே தற்போது பயிற்சியில் உள்ளார்கள். இவர்கள் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் பயிற்சியை முடித்து சித்தியடைந்து தாதியர்களாக வெளியேறியதும் குறைந்தது 3 வருடங்களுக்கு பயிற்சிக் கல்லூரியில் இருந்து புதிய தாதியர்கள் எவரும் வெளியேறமாட்டார்கள்.

ஒவ்வொரு வருடமும் ஒரு அணியில் 100 பயிலுநர் தாதியர்களைச் சேர்த்து 3 வருடகால பயிற்சி வழங்குவதற்குத் தேவையான சகல வசதிகளும் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இருக்கின்ற போதும் —

அரசாங்கம் அதற்கான நிதியை வழங்கி புதிதாக ஆட்களைச் சேர்க்காமல் புறக்கணித்து வந்துள்ளதாக வைத்தியர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

1992 ஆம் ஆண்டு சுகாதாரத் திணைக்களத்தின் ஆண்டறிக்கையின் படி வடபகுதியில் ஒரு லட்சம் சனத்தொகையினருக்கு 25 தாதியரும் தென்பகுதியில் கண்டி, கொழும்பில் ஒரு லட்சம் சனத்தொகையினருக்கு 75 — 148 தாதியரும் சேவையிலிருந்துள்ளனர். குடும்பநல சேவையாளர்களின் எண்ணிக்கையும் இதே மாதிரியாகவே உள்ளது.

வட பகுதியில் ஒரு லட்சம் பேருக்கு 15 இற்கு குறைந்த குடும்ப நல சேவையாளரும், தென் பகுதியில் ஒரு லட்சம் பேருக்கு 30 தொடக்கம் 45 குடும்பநல சேவையாளர்களும் சேவையாற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் இருந்து வட பகுதி மக்கள் சுகாதார சேவையில் இருந்து புறக்கணிப்பட்டுள்ளமை தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

---

# யாழ். செயலகத்தில் தகவல் அதிகாரி

யாழ்ப்பாணம், டிச. 13

யாழ். செயலகத்தில் தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப் படவிருக்கிறார்.

யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலத்தினால் இந்த அதிகாரி நியமிக்கப்படவிருக்கிறார்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள், மக்கள் பிரச்சினைகளை தீர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த விவரங்களை வெளியிடும் பொறுப்பு இந்த அதிகாரிக்கு வழங்கப்படும்.

யாழ். செயலகத்தில் நடக்கும் கூட்டங்கள் பற்றியும், மாவட்டத்தின் பிரதேச செயல மட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பற்றியும் தெரிவிக்கும் செயலக பேச்சாளராக இந்த அதிகாரி இருப்பார். (இ-3)

---

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு சகல வசதியும் வழங்கப்பட வேண்டும்
## மாணவர் அவை ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், டிச. 13

ஏனைய முதலாந்தர தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு வழங்கப்படும் சகல வசதிகளும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதிக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் மாணவர் அவை, ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் இடம்பெற்றுள்ள 21 கோரிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

அம்மகஜரில் இடம்பெற்றுள்ள ஏனைய முக்கிய கோரிக்கைகள் வருமாறு:

★ விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

★ தொழில் நுட்பப் பயிற்சி நெறிகளில் சித்தி பெற்றவர்களுக்கு தொழில் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

★ கணனி மற்றும் ஆய்வுகூட வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மகஜரில் கூறப்பட்டுள்ளது.

1991இல் நிரந்தர அதிபர் ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னர், நிரந்தர அதிபர், உப அதிபர் நியமிக்கப்படவில்லை. பொறியியல்துறைக்கான உயர்தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியில் மேற்படிப்பைத் தொடர வசதிகள் செய்து தரப்படவில்லை என்றும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-4)

---

### சைக்கிள்கள் - வளர்ப்பு நாய்கள்:
# வீடு, வீடாகச்சென்று இலக்கத்தகடு வழங்க மாநகரசபை திட்டம்

யாழ்ப்பாணம், டிச. 13

1995ஆம் ஆண்டுக்கான சைக்கிள்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கான இலக்கத்தகடு அனுமதிப் பத்திரங்களை வீடு வீடாக நேரடியாகச் சென்று விநியோகிக்கும் திட்டம் ஒன்றை யாழ். மாநகரசபை அமுல்படுத்தவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் இத்திட்டம் அமுல் செய்யப்படும்.

அனுமதிப் பத்திரங்களை யாழ். மாநகரசபைக்கு சென்று எடுக்கும் சிரமங்களைத் தவிர்ப்பதும்—

கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பில் வளர்ப்பு நாய்களுக்கு பாதுகாப்பளிப்பதுமே— இத்திட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது. இதே போன்ற நடைமுறை சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-4)

---

## புலிகளின் குரல் வானொலியில்

**13 — 12 — 1994**
**செவ்வாய் இரவு**

★ 8-01 — ஊர் சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10 — அறிந்துகொள்ளுங்கள் — தகவற்களஞ்சியம்
★ 8-20 — நலந்தானா — நிகழ்ச்சியில் ''மருந்துகளின் தவறான பயன்பாட்டால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்''
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய ''தெளிவு''
★ 8-50 — களமும் கானமும் — நிலாமகள் எழுதிய ''உண்மையான விடிவெள்ளி''
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**14 — 12 — 1994**
**புதன் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## தொலைக்கல்வி அமர்வு

வட்டுக்கோட்டை தொலைக்கல்வி நிலையத்தின் 1 ஆம், 2 ஆம் (91 / 94, 93 / 95) வருட ஆசிரிய மாணவர்களுக்கான 5 நாள் தொடர் அமர்வு 15 ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதால் சகல பயிலுநர் ஆசிரியர்களையும் சமுகமளிக்கும்படி சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார். (க)

---

### வெதுப்பகங்கள்
# இனிப்புப் பண்டங்களையும் உற்பத்தி செய்ய அனுமதி

யாழ்ப்பாணம், டிச. 13

மாத் தட்டுப்பாடு காரணமாக இனிப்புப் பாண், இனிப்புப் பணிஸ், கேக் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நேற்று முதல் நீக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெதுப்பகங்கள் கூடிய அளவு பாணை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது.

தற்போது போதிய அளவு மா கையிருப்பில் உள்ளதால் இப் பொருள்களையும் தாராளமாக உற்பத்தி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (இ-17)

## வைத்தியசாலைக்கு புதிய ஜெனறேற்றர்

வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலைக்கு புதிய ஜெனறேற்றர் ஒன்று வந்து சேர்ந்துள்ளது. இதனால் வைத்தியசாலையின் பல் வைத்திய சிகிச்சை நிலையம், நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறும் வார்ட்டுக்கள், மகப்பேற்று நிலையம் ஆகியன மின்னொளி பெறவுள்ளன. (க-161)

---

### பொலீஸாருக்கு எதிராக தாக்கலாகியுள்ள
# 2,093 மனிதஉரிமை மீறல் மனுக்கள் உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும்

கொழும்பு, டிச. 13

பொலீஸாருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டாயிரத்து 93 அடிப்படை மனிதஉரிமை மீறல் மனுக்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இம்மனுக்கள் ஓகஸ்ட் மாதம் நடந்த பொதுத்தேர்தலுக்குப் பின்னர் தாக்கல் செய்யப்பட்டவையாகும்.

மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமை மீறல் சம்பவங்கள் அனைத்தும் 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்றவைகளாகும்.

பொலீஸார்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் பொலீஸ் திணைக்களம் அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வார இறுதிவரை உயர் நீதிமன்றம் 250பேருக்கு எதிரான வழக்குகளில் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

40 பொலீஸாருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆறு பொலீஸாருக்கு எதிராக பொலீஸ் திணைக்களம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அடிப்படை மனித உரிமை மீறல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட பொலீஸாரின் சார்பில் அரசாங்கம் 28 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தை அபராதமாகச் செலுத்தியுள்ளது. (ஓ-எ)

---

# இந்திய றொக்கெட் விஞ்ஞானிகளிடம் ரகசியங்களை கறந்த மாலைதீவுப் பெண்கள்!

''மாத்தா ஹரி'' என்ற பெண் இரண்டாம் உலக யுத்த காலத்தில் பெயர் பெற்ற உளவாளி.

இவர் ஜேர்மனிக்காக உளவு வேலையில் ஈடுபட்டவர்.

அண்மையில் அம்பலமாகிய இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலைய இரகசியங்களை விற்ற நிகழ்ச்சியும் ஒரு ''மாத்தா ஹரி'' சம்பவம் என்று வருணிக்கப்படுகின்றது.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் இரகசியங்களைப் பணத்துக்காகவும் பாலியல் நோக்கங்களுக்காகவும் இந்திய விஞ்ஞானிகள் உட்பட உயர் அதிகாரிகள் விற்றதைக் கடந்த மாதம் இந்திய உளவுத் துறையினர் கண்டுபிடித்து அம்பலப்படுத்தினர்.

இந்த உளவுச் சம்பவத்தை ஆராய்ந்து கொண்டுபோன போது புதிய புதிய முடிச்சுகளும் சிக்கல்களும் வெளியாகின.

### கவர்ச்சிப் பாவை

விசா முடிந்தபிறகும் இந்தியாவில் தங்கி இருந்ததாக கடந்த ஒக்டோபர் 20ஆம் திகதி மாலைதீவு வாசியான மரியம் ரஷீதாவை (வயது30) கேரளப் பொலீஸார் கைது செய்தனர்.

விசாரணையில் மரியம் ரஷீதா என்ற இப்பெண் மாலைதீவு பாதுகாப்புப் படையைச் சேர்ந்த அதிகாரி என்றும் இந்திய றொக்கெட் பற்றிய விவரங்களை அறிய வந்தவர் என்றும் தகவல் வெளியானது.

அவரது கூட்டாளியான பவுசியா ஹஸன் என்ற பெண்ணைப் பொலீஸார் நவம்பர் 13 ஆம் திகதி கைது செய்தனர். இவரும் மாலைதீவைச் சேர்ந்தவர்.

### தகவலின் பேரில் விஞ்ஞானிகள் கைது

பின்னர் அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் கேரள மாநில வலியமலா றொக்கெட் நிலைய [illegible] யான சசிகுமா[illegible] அவரது நண்பனான பெங்களூரைச் சேர்ந்த சந்திரசேகர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

விஞ்ஞானி சசிகுமாரன் உளவு வேலைபார்க்க வந்த மாலைதீவுப் பெண்களுடன் தொடர்பு வைத்திருந்து அவர்களுக்கு ரகசியத் தகவல்களைக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

இவர் வலியமாலா றொக்கெட் நிலையத்தின் உதவி இயக்குநர் ஆவார்.

# இழப்பை மதிப்பிட முடியாது என்கிறார் சிரேஷ்ட அதிகாரி

இவர்கள் கொடுத்த தகவலின் பேரில் வலியமாலா றொக்கெட் நிலையத்தைச் சேர்ந்த நம்பி நாராயணன் என்ற மற்றொரு விஞ்ஞானியையும் திருவனந்தபுரத்தில் பொலீஸார் கைதுசெய்தனர். இவர் அந்த றொக்கெட் நிலையத்தின் எஸ்.பி.எஸ்.பி. பிரிவின் உதவி இயக்குநர் ஆவார்.

[illegible] மாத்து தலைமையிலான பொலீஸ் படை விசாரணை நடத்தி வருகிறது.

### றொக்கெட் ரகசியம்

இந்த உளவுக் கும்பல் கொடுத்த ரகசியத் தகவல்களைக் கொண்டு வெளிநாட்டினர் 3 மாதங்களில் றொக்கெட் என்ஜின் ஒன்றைத் தயாரித்துவிட முடியும் என்று தெரிய வந்துள்ளது.

இந்தியா முதலில் ஏவிய பி.எஸ்.எஸ்.வி. றொக்கெட் தோல்வியில் முடிந்ததற்கும் இந்த உளவுக் கும்பலின் சதிதான் காரணமாக இருந்திருக்கலாம் என இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் சந்தேகிக்கிறார்கள்.

### மேலும் பலருக்கு தொடர்பு

இந்த உளவுக் கும்பலுடன் [illegible] குறைந்த பட்சம் 20 விஞ்ஞானிகள் மற்றும் சில உயர் பொலீஸ் அதிகாரிகள், வியாபாரிகள் ஆகியோருக்கு தொடர்பு இருக்கலாம் எனப் பொலீஸார் கருதுகிறார்கள்.

### பின்னணியில் பாகிஸ்தானா?

''பாகிஸ்தான் இன்ரர் சேர்விஸ்'' உளவு நிறுவனமே இரகசியங்களைப் பெற்றுக் கொள்ள மாலைதீவுப் பெண்களை அனுப்பி வைத்தது என்று இந்தியப் பத்திரிகைகள் கூறுகின்றன.

தென் இந்தியாவின் முக்கிய நிறுவனங்களுக்குள் ஊடுருவி அவற்றைச் சீர்குலைக்கவே இந்த மோசடி நடைபெற்றது எனவும் —

மாலைதீவிலிருந்து இயங்கும் ஒரு பாகிஸ்தானியரின் நடவடிக்கையின் ஒரு பகுதியே இது எனவும் — 'ஹிந்து'ப் பத்திரிகை கூறியது.

இந்தியாவின் றொக்கெட் நடவடிக்கைகள் பற்றிய உளவு நடவடிக்கைகளில் ஜேர்மனி, சுவீடன் உட்பட ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சிலரும் சம்பந்தப்பட்டிருப்பதாக ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த விவகாரம்பற்றி நேரடியாக அறிந்துகொள்ள இந்திய மத்திய புலனாய்வுத் துறைத் தலைவர் கே. விஜய ராமோ ராவ் திருவனந்தபுரம் சென்றுள்ளார்.

### பிரதமர் ராவ் நேரடி அக்கறை

இதேவேளை இது தொடர்பாக முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதமர் நரசிம்மராவ் ஆர்வம் கொண்டுள்ளதாக அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் திருவனந்தபுரம் சென்றிருந்த பிரதமர் ராவ் இவ்விவகாரம் பற்றி நடத்தப்படும் விசாரணைகள் தொடர்பாக நாளாந்தம் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறின.

தொகுப்பு:
— பாரதிநேசன் —

உளவில் ஈடுபட்ட இந்தியாவைச் சேர்ந்த இரு விஞ்ஞானிகளும் வர்த்தகப் பிரமுகரும் இந்திய விண்வெளித் துறை சம்பந்தமான தொழில்நுட்ப மற்றும் வான்வெளித் தொடர்பு சாதனங்கள் சம்பந்தமான பெறுமதிமிக்க தகவல்களை வெளியிட்டிருக்கலாம் எனப் பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

### மதிப்பிட முடியாத சேதம்

''உளவு நடவடிக்கைகளால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிட முடியாது'' என்று சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் கைப்பணி கண்காட்சி

யாழ்ப்பாணம், ஞானக் குழந்தை இல்லம் பாலர் பாடசாலையின் பாலர் கைப்பணிக் கண்காட்சி நாளை, பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். காலை 9 மணி முதல் பி. ப. 5 மணி வரை கண்காட்சியைப் பார்வையிடலாம்.

கண்காட்சி ஆரம்ப வைபவத்துக்கு பாலர் கல்விக் கழகத் தலைவர் திரு. ஆ. செல்லையா தலைமை வகிப்பார். திருமதி மிதிலா விவேகானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (அ)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி கிருஷ்ணர்

[இளைப்பாறிய ஆசிரியர்]

பொலிகண்டியில் பிறந்தவரும் வதிரியை வசிப்பிடமாகக் கொண்டவரும், நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை (அரசடி)யின் இளைப்பாறிய ஆசிரியரும், நெல்லியடி கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வதிரிக்கிளைத் தலைவரும், சமூக சேவகருமான சின்னத்தம்பி கிருஷ்ணர் அவர்கள் சிவபதப்பேறு அடைந்துவிட்டார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், குலேந்திரராஜா (சிறாப்பர் கரவெட்டி பிரதேச செயலகம்), மகேந்திரராஜா (உப அதிபர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி), யோகேந்திரராஜா (கொழும்பு), புவனேந்திரராஜா (லிகிதர் கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), அருந்தவராணி, சிவரூபராணி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், கனகேஸ்வரி, கோகிலாதேவி (எழுத்தாளர், அதிபர் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை), ரமணி, கிருஷ்ணவேணி (ஆசிரியை ஸ்ரீ நாரத வித்தியாலயம், கரவெட்டி), பத்மசோதி (கூட்டுறவுப் பரிசோதகர் பிரதேச செயலகம் கரவெட்டி), ஸ்ரீஸ்கந்தராஜா (முறைசாராக் கல்விப் பிரிவு யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பாமிலா, தாட்சாயணி, கிதாஞ்சலி (பருத்தித்துறை மெதடிஸ்த மிசன் கல்லூரி), கிருபாலினி (வடமராட்சி மகளிர் கல்லூரி), பிரவீணன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), சுவர்ணாங்கி (நெல்லியடி மெ. மிஷன் பாடசாலை), சுஜீவன், கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிச் சடங்குகள் 12-12-1994 திங்கட்கிழமை திக்கம் மயானத்தில் நடைபெற்றன. உறவினர்களும், நண்பர்களும் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கி. மகேந்திரராஜா
(இணுவில்)

(34174)

## திருமதி தங்கம்மா சண்முகம்

[குரும்பசிட்டி]

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது சங்கானை வல்லை வீதியில் வசித்தவருமான திருமதி தங்கம்மா சண்முகம் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சண்முகம் (முன்னாள் ஆசிரியர் நடேஸ்வராக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பராசக்தி, திருமதி ஞானசக்தி, ஞானசிவம் (ஜேர்மனி), ஆனந்தசிவம் (ஜேர்மனி), யோகசிவம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சின்னத்துரை, பஞ்சாட்சரம் (யாழ். மாநகர சபை), திருமதி பூபதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கனகசுந்தரம், (அவுஸ்திரேலியா), வன்னியசிங்கம், காலஞ்சென்ற நாகலிங்கம், திருமதி கனகம்மா, காலஞ்சென்ற தற்பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி உமாநந்தினி, நிரஞ்சன், பிருந்தாஹரன் (டென்மார்க்), தேவகி (யாழ். பல்கலைக்கழகம் - வர்த்தகம் 3 ம் வருடம்), குமரன் (கனடா), மாலினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்:
சி. பஞ்சாட்சரம்
[மருமகன்]

வல்லை வீதி,
சங்கானை.

[34166]

## திருமதி அம்பலவாணர் நாகம்மா

வட்டுக்கோட்டை கிழக்கு காலம் சென்ற அம்பலவாணரின் அன்பு மனைவி நாகம்மா 12-12-94 இல் சிவபதமடைந்துவிட்டார். இவர் தளையசிங்கம் D.R. சபாரட்ணம் (மூளாய் றோட்), காலம் சென்ற பொன்னம்மா, சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரியும், இரத்தினாதேவியின் பெரிய தாயாரும், பொன்ராசு [வேலைகள் மேற்பார்வையாளர் திருமலை] ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 13-12-94 செவ்வாய்க்கிழமை 11 மணிக்கு வழுக்கையாற்று மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
பொ. இரத்தினாதேவி
[பெறாமகள்]

வட்டு-கிழக்கு,
வட்டுக்கோட்டை.

[34170]

செல்வி

## கௌறின் செபஸ்தியாம்பிள்ளை

யாழ்/சென். றோக்ஸ் விளையாட்டுகழக வீராங்கனை

செல்வி கௌறின் செபஸ்தியாம்பிள்ளை நேற்று காலமானார்.

அன்னார் செபஸ்தியாம்பிள்ளை - விபேபியா தம்பதிகளின் அன்புமகளும், அன்ரன், வினி, மொறின் (சென்றோக் பாலர் பாடசாலை ஆசிரியை), ஜெனி, ஐரின், ராஜ். ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராசேந்திரன் (ஜப்பான்), எழிலன் (யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), மாகிறேற் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 13-12-94 இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
தானியல் செபஸ்தியாம்பிள்ளை
(தந்தை)

13. சென்பற்றிக்ஸ் வீதி,
குருநகர்:
யாழ்ப்பாணம்.

(31173)

# ஆனையிறவுப் பாதை திறப்பதில் இருசாராரின் சம்மதமும் அவசியம்

## அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, டிச. 13

ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கு இருசாராரின் சம்மதமும் முக்கியம்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இப்பாதையைத் திறப்பது மூலம் வடக்கின் உற்பத்திப் பொருள்களை ஏனைய பகுதிகளுக்கும் கொண்டுவர முடியும் என்றும் —

மின்சாரத்துக்கான பொருள்களை இப் பாதை ஊடாக வடக்கே கொண்டுசெல்ல முடியும் என்றும் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார்.

ஆனையிறவுப் பாதையைத் திறக்கும்போது பூரண பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்றும் அவர் சொன்னார். (இ-க)

# விசேட பாடங்களில் பட்டப்படிப்பு மேற்கொள்ள மேலும் 500 பேர்

## பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முடிவு

கொழும்பு, டிச. 13

விசேட பாடங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக மேலும் ஐந்நூறு மாணவர்களை பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்வது என்று பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

1993 - 94 ஆம் கல்வி ஆண்டுக்காக இம் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்

1992ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இம் மாணவர்கள் தெரிவு செய்யப் படுவார்கள்.

வரலாறு, சமஸ்கிருதம், ஆங்கிலம், பாளி, கிறிஸ்தவம், பௌத்தம், இந்துமதம் ரோமன் நாகரிகம், மொழியியல், பிரெஞ்சுமொழி, ரஷ்ய மொழி, அரபுமொழி, கிரேக்க மொழி, ஜப்பானிய மொழி, நாடகவியல் என்பனவே விசேட பாடநெறிகளாகும்.

இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுந்த மாணவர்கள் நான்கு பாடங்களிலும் மொத்தம் 200 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும். அத்துடன் விசேட பாடத்தில் திறமைச் சித்தியாவது பெற்றிருக்கவேண்டும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (இ-எ)

## உலக சிறுவர் தின விழா

வடமராட்சி, டிச. 13

இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் உலக சிறுவர் தின விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை கிராமக் கோட்டடியில் உள்ள சபையில் நடைபெறவுள்ளது. (இ-173)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், டிச. 13

கடந்த புதனன்று மட்டக்களப்பில் களுவன் கேணிப் பகுதியில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் கப்டன் சடான் என்ற போராளி வீரச்சாவடைந்தார். (ஐ)

# உதவி வைத்தியர்களின் வேலை நிறுத்தம் முடிவு!

## சந்திரிகா சமரசம் செய்தார்

கொழும்பு, டிச. 13

உதவி வைத்திய அதிகாரிகளும் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும் மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தம் நேற்றுடன் விலக்கிக் கொள்ளப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் உதவி வைத்திய அதிகாரிகளும் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும் வேலைக்குத் திரும்புவர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வேலை நிறுத்தம் செய்து வந்த வைத்திய அதிகாரிகளின் தூதுக் குழுவுடன் ஜனாதிபதி சந்திரிகா நேற்று அலரி மாளிகையில் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து வேலை நிறுத்தத்தைக் கைவிடுவது என்ற முடிவு எடுக்கப் பட்டது.

இச் சந்திப்பின் போது சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸியும் கலந்து கொண்டார்.

தம்மை முதலாம் தர வைத்திய அதிகாரிகள் சேவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரி உதவி வைத்திய அதிகாரிகளும், பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும் கடந்த பல நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர்.

## கொழும்பில் நாளை பேரணி

புத்தளம் மாவட்டம் இரணவிலவில் அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்படுவதை ஆட்சேபித்து நாளை கொழும்பு காலிமுகதிடலில் இருந்து அமெரிக்கத் தூதரகம் வரை பேரணி ஒன்று நடைபெறவிருக்கின்றது. பேரணியின் முடிவில் தூதரகத்திடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவிருக்கின்றது. [உ-6]

## பாதாள ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித்தது. தெஹிவளையில் வைத்து அமைச்சர் சி. வி. குணரத்தினவை கொலை செய்ய முயற்சித்தது மற்றும் கொலை கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டது போன்ற பல குற்றச்சாட்டுகள் தொடர்பாகத் தேடப்பட்டுவந்தவர் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் 'திவயின' சிங்களப் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். (ஐ-6)

வேலைநிறுத்தம் செய்யப்போவதாக

# வைத்திய அதிகாரிகள் அரசுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, டிச. 13

உதவி வைத்திய அதிகாரிகளும் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும் முதலாந்தர வைத்திய அதிகாரிகள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் தாங்கள் அதனை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அரச வைத்திய அதிகாரிகள் (ஜி.எம்.ஓ.ஏ) சங்கம் எச்சரித்துள்ளது.

வேலைநிறுத்தம் செய்து வந்த பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் மற்றும் உதவிவைத்தியஅதிகாரிகளின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தாம் வேலை நிறுத்தம் செய்து சுகாதார சேவையையே முடக்கிவிடப் போவதாகவும் இச்சங்கம் அச்சுறுத்தி உள்ளது

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் உறுப்பினர்களுக்கும் வேலை நிறுத்தம் செய்துவரும் உதவி மற்றும் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கும் இடையேயான தற்போதைய சம்பள வேறுபாட்டு விதம் தொடர்ந்து பேணப்படவேண்டும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசைக் கேட்டுள்ளது. (ஐ-எ)

## நாணய

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துணர்வு பேச்சுவார்த்தைகளை நடத்துவதும் அதன் கொள்கை நோக்கங்களை அறிந்து கொள்வதும் தூதுக் குழுவின் நோக்கமாகும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தார்.

இது உண்மை நிலையை அறியும் ஒரு விஜயமாகும் என்றும் அவர் கூறினார்

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு ஒன்று பத்து நாட்களுக்கு முன்னர் மேற்கொண்ட விஜயத்தை அடுத்து இந்த விஜயம் இடம் பெற்றுள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் போட்டிகளைப் பேணும்படியும்— வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் செலவைக் குறைக்கும்படியும் உலக வங்கிக்குழு இலங்கையை வற்புறுத்தியிருந்தது.

சலுகை வட்டி விகிதத்தில் சர்வதேச நாணயசபை 1989 ஆம் ஆண்டிலிருந்து 63 கோடி டொலர்களை நீண்ட கால கடனாக வழங்கியிருக்கிறது.

செலுமதி நிலுவையைச் சமாளிப்பதற்கென அடிப்படைக் கூட்டமைப்பு வசதிகள், துரிதக்கொடுப்பனவுக் கட்டமைப்புத் திட்டங்கள் ஆகியனவற்றின் கீழ் இக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

தூதுக்குழுவின் தலைவரான நாணய சபையின் மத்திய ஆசிய பணிப்பாளர் வியாழன் கொழும்பு வந்து சேருவார்.

அரசு மாறிய பின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

## உயர்தர ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் மீண்டும் சென்றடைய முடியாது என்பதாலும், பரீட்சை முடிவுகள் நேற்று வந்து சேர முடியாமற் போயிற்று.

'கோமாரி' இன்று காலை அங்கிருந்து புறப்பட்டு பருத்தித்துறை வந்து சேரும். பரீட்சை முடிவுகளை எடுத்து வரும் அதிகாரியும் அதில் வருவார்.

பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்து பெரும் எண்ணிக்கையான வடமராட்சிப் பகுதி மாணவர்களும் —

கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியும் — பருத்தித் துறை துறைமுகத்திற்கு வந்திருந்ததாக எமது வடமராட்சிச் செய்தியாளர் அறிவிக்கிறார். (அ-3-173)

## முள்ளிக்குளம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் கடும் தாக்குதலைத் தொடர்ந்து கடற்படைப்படகுகள் விரட்டியடிக்கப்பட்டன. இத்தாக்குதலின் போது கடற்படையினர் தரப்பில் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

சேதவிவரங்கள் குறித்த தகவல்கள் தெரியவரவில்லை

இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தின் பின்னர் கற்பிட்டிப் பகுதியில் இருந்து நான்கு படகுகளில் வந்த கடற்படையினர் கரையோரப் பகுதிகள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்தினர்.

கடற்படைப் படகுகள் தாக்குதலில் ஈடுபட்டிருந்த வேளை அப்பகுதிக்கு வந்த ஹெலி ஒன்று சரமாரியாக கலிபர் தாக்குதலை நடத்தியது. தொடர்ந்து இரு பொம்மர்கள் அப்பகுதிக்கு வந்து மாறிமாறி குண்டுவீச்சினை மேற்கொண்டன.

நண்பகல் 12 மணிவரை இத்தாக்குதல்கள் நீடித்தன. (இ-ஐ)

## வருடாந்த மாநாட்டுக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டது.

இப்போது ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் ... னர், இவ்வாறு ... என்று அறிவித்திருந்தது.

இச்சூழ் நிலையில்— தமது வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளும்படி தமிழ் அரசியல் கட்சிகளுக்கு ... அழைப்பு விடுத்திருப்பது அரசியல் முக்கியத்துவம் பெறுவதாக ... வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஆந்திர முதல்வராக ராமராவ் பதவி ஏற்றார்

## வைபவத்தில் ஜெயலலிதாவும்

ஹைதராபாத், டிச. 13

ஆந்திர மாநிலத்தின் புதிய முதலமைச்சராக தெலுங்கு தேசக் கட்சியின் தலைவர் என்.ரி. ராமராவ் நேற்றுப் பதவியேற்றார்.

நேற்றுப் பிற்பகல் ஹைதராபாத்தில் உள்ள லால்பகதூர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ராமராவுக்கு மாநில ஆளுநர் கிருஷ்ணகாந் பதவிப் பிரமாணமும் ரகசியக்காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.

திரு. ராமராவுடன் 9 உறுப்பினர் அமைச்சரவையும் பதவி ஏற்றது.

திரு. ராமராவ் ஆந்திர மாநிலத்தில் மூன்றாவது தடவையாக முதலமைச்சராகப் பதவியேற்றிருக்கிறார்.

294 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப் பேரவையில் 292 தொகுதிகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. 219 இடங்களைத் தெலுங்குதேசக் கட்சி பெற்றது.

பதவியேற்பு நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, ஒரிசா முதலமைச்சர் விஜய் பட்நாயக் உட்பட அரசியல் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஆந்திர மாநிலத்தில் உடனடியாக மதுவிலக்கு அமுலுக்கு வருவதாக முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் திரு ராமராவ் அறிவித்தார். [க]

ஆளும் கட்சி

# மாகாணசபைஉறுப்பினரின் 3 வாகனங்கள் தீக்கிரை!

கொழும்பு, டிச. 13

தென் மாகாண சபையின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஏ. எஸ். ஹமாது என்பவருக்குச் சொந்தமான 3 வாகனங்கள் தீக்கிரையாகின என்று தெரிவிக்கப்படுகிறது.

அவருக்குச் சொந்தமான கராஜில் இம் மூன்று வாகனங்களும் நிறுத்தப்பட்டிருந்தன.

இது திட்டமிடப்பட்ட அரசியல் பின்னணியைக்கொண்ட சதிச்செயல் என்று பொலீஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக பொலீஸார் ஒருவரைக் கைது செய்தனர். (ஐ-எ)

# முதலமைச்சரின் ஜீப் மர்மமாக மறைந்தது!

கொழும்பு, டிச. 13

வடமேல் மாகாண முதலமைச்சரின் உத்தியோகபூர்வ வாகனமான மிட்சுபிஷி ஜீப் கடந்த முதலாம் திகதியில் இருந்து காணாமல்போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடந்த மாதம் 30 ஆம் திகதி இந்த ஜீப், முதலமைச்சரின் அலுவலக வளவில் உள்ள கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றும் —

காணாமற்போன ஜீப்புக்கு என்ன நடந்தது என்பது பற்றி தகவலேதும் கிடைக்கவில்லை என்றும் குருணாகல பொலீஸார் தெரிவித்தார்.

## அரசின்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் இவ்வருட இறுதிக்கு முன்னர்—நத்தார் காலத்தில் — ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கின்றேன்.

அதற்கு முன்னர் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவது குறித்து அரசின் யோசனைகளுக்கு புலிகள் கொள்கையளவில் இணங்கியுள்ளனர்

### வெளிஉலக அங்கீகாரம்

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகளை ஐரோப்பிய சமூகம் அங்கீகரித்திருப்பது இலங்கைக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.

அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இலங்கை பற்றி முன்னர் பிழையான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தன.

சமாதான முயற்சிகளை வரவேற்கும் விதத்தில் ஐரோப்பிய சமூகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்து ஐரோப்பிய சமூகம் சாதகமான முறையில் பதிலளித்திருப்பது இதுவே முதல் முறையாகும்

முன்னைய அரசாங்கத்தின் கொள்கைகள் குறித்து ஐரோப்பிய சமூக நாடுகள் அவ்வளவு தூரம் நல்ல அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கவில்லை

அமெரிக்க காங்கிரஸ் 1991 ஆம் ஆண்டு இலங்கை பற்றிப் பிழையான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தது.

1989 முதல் 92 வரையான காலப்பகுதியில் நெதர்லாந்து, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இலங்கைக்கு உதவ மறுப்புத் தெரிவித்திருந்தன.

நாட்டின் மனித உரிமை மீறல்கள் குறித்தும் மேற்கு நாடுகள் முன்னர் கவலை தெரிவித்து வந்தன.

### மோதல் தவிர்ப்பு

புலிகளுடன் மோதல் தவிர்ப்பையும் பின்னர் யுத்த நிறுத்தத்தையும் ஏற்படுத்த அரசு விரும்புகிறது. பின்னர் பேச்சு மூலம் சமாதானத் தீர்வுகாண நாம் திட்டமிட்டுள்ளோம்.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு அரசுக்கு பொதுமக்களும், வெகுஜனத் தொடர்புத் துறையினரும் உதவவேண்டும்.— இவ்வாறு சந்திரிகா தெரிவித்தார்.

வடபகுதிக்கு பாதுகாப்பான பாதையைத் திறப்பது குறித்து விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் இணக்கம் ஏதும் ஏற்பட்டிருக்கிறதா என்பது குறித்து தெளிவான தகவல் எதனையும் ஜனாதிபதி வெளியிடவில்லை. (உ-ஐ-6)

## கல்விச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 13

மாணவர்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் பண்டத்தரிப்பு பிரதேச இந்து வாலிபர் சங்கம், இலவசக் கல்விச் சேவையை ''விவேகானந்தா மனை'' ஊடாக வழங்கி வருகிறது.

அத்துடன், வாரந்தோறும் ஆன்மீகம், நல்லொழுக்கம் தொடர்பான விரிவுரை வகுப்புக்களையும் சங்கம் நடத்திவருகிறது. (ஒ)

## மாத்தளையில் கறுப்பு மழை!

கொழும்பு, டிச. 13

மாத்தளை பகுதியில் 'கறுப்பு மழை' பெய்ததாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது. இது பற்றி ஊர் மக்களின் பேட்டிகளையும் அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது. (ஐ-எ)

## கிராம வளர்ச்சித் திட்ட பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், டிச. 13

கிராம வளர்ச்சித் திட்ட பயிற்சி நெறி இன்றும் நாளையும் சிறுப்பிட்டி அரசினர் ஆரம்ப பாடசாலையில் நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சி, கிராமிய பாசறை இணைப்பாளர் திரு. கோபாலசிங்கம் தலைமையில் காலை 8-00 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி பயிற்சியை ஆரம்பித்து வைப்பார்.

கோப்பாய் பிரதேசச் செயலர் திரு. கேதீஸ்வரன், திரு. இளம்பரிதி ஆகியோர் கருத்துரைகள் வழங்குவர். (இ)

## செயலகத்தில் கூட்டம்

யாழ். அரச அதிபர் திரு கே. பொன்னம்பலம் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு யாழ் செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர்கள், ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், அத்தியாவசிய சேவைகளுடன் தொடர்புடைய திணைக்களங்களின் தலைவர்கள் அந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 202/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13-12-94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org